(ஆ) அரசு மருத்துவமனைகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் உள்ளிட்ட சில காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவேண்டியன் அவசியம் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், திரு. அ. சௌந்தரபாண்டியன், திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. கா. ராமச்சந்திரன் ஆகியோர் பேரவை விதி 55-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்களும், புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களும், மனிதநேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா மற்றும் திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரும் பேரவை விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். நேரத்தின் அருமை கருதி, மாண்புமிகு உறுப்பினர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்ததாகக் கருதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைப் பதிலுரை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

***மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மட்டுமல்லாமல், (குறுக்கீடு) முன்னோடி மாநிலமாக இன்றைக்கு உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் உலக சுகாதார நிறுவனம், மத்திய சுகாதாரத் துறை என அனைத்துத் தரப்பினராலும்*

2015 ஏப்ரல் 1][டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

பாராட்டப்படுகின்ற ஒரு துறையாக, மக்கள் நல்வாழ்வுத் துறையை இன்றைக்கு மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தளவுக்கு Millennium Development Goals-ஐ, இலக்கை அடைந்திருப்பதற்குக் காரணம் மருத்துவர்கள் மட்டுமல்லாமல் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் (para-medical staff) போன்ற அனைத்துப் பணியாளர்களையும் உடனுக்குடன் நியமிக்கின்ற பணியையும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருப்பதும் இந்தச் சாதனைக்குக் காரணம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பதவியேற்றவுடனேயே 2,027 மருத்துவ அலுவலர்களை மிகச் சிறப்பாக நியமனம் செய்து, பணியிலே ஈடுபடுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு Medical Services Recruitment Board என்று சொல்லக்கூடிய மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தைப் புதிதாக உருவாக்கி, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முதன்மையாக, முன்னோடியாக இன்றைக்கு, Medical Services Recruitment Board வழியாகத் தேர்வுகளை நடத்தி, மிகச் சிறப்பான முறையிலே இன்றைக்கு ஏறத்தாழ 5,472 மருத்துவர்கள், அதேபோல், Pharmacists, V.H.N. என்று சொல்லக்கூடிய கிராம சுகாதார செவிலியர்கள், Lab Technician, Radiographer, E.C.G. Technician மற்றும் பல்வேறு திறன் உதவியாளர்கள் உள்பட ஏறத்தாழ 6,918 மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்ட பணியாளர்களை, மருத்துவத் தேர்வு வாரியம் மிகச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து, இன்றைக்குப் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் இந்த அவையிலே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, ஏற்கெனவே வேலைவாய்ப்பு மூலமாக இட ஒதுக்கீட்டைப் பின்பற்றி 2,027 பேர்கள், இப்போது மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய M.R.B.-Medical Services Recruitment Board-ன் மூலமாக 6,918 பேர்கள் என மொத்தம் 8,945 பேர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே,

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2015 ஏப்ரல் 1

(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களால் இந்த நான்காண்டுகளிலே பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பணியாளர் நியமனம் என்பது, ஓய்வு பெறுகின்றபோது ஏற்படுகின்ற பணியாளர் நியமனம் மட்டுமல்ல. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பணியாளர்கள் பணியிடமும் ஆகும். இன்றைக்கு மருத்துவர்கள் பணியிடம் காலியாக இருக்கிறது என்று சொன்னால், ஓய்வு பெறுகின்றபோது ஏற்படும் பணியிடங்கள் மட்டுமல்ல, புதிதாக உருவாக்கப்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள், புதிதாகத் தரம் உயர்த்தப்படுகின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள், புதிதாகத் தரம் உயர்த்தப்படுகின்ற தாலுகா மருத்துவமனைகள், புதிதாக உருவாக்கப்படுகின்ற மருத்துவக் கல்லூரிகள், இப்போது மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கின்ற Multi Super Speciality Hospital என எல்லா இடங்களிலும் தோற்றுவிக்கப்படுகின்ற, புதிதாக உருவாக்கப்படுகின்ற பணியிடங்களும் (newly created posts) அடங்கும். ஆக, அந்தப் பணியிடங்களையும் உருவாக்கி, M.R.B. மூலமாக இன்றைக்கு மிகச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து, அதாவது— qualified and meritorious candidates-ஐ தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு இரண்டு மாதப் பயிற்சியும் கொடுத்து, மிகச் சிறப்பான முறையிலே நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுடைய இடம்கூட, கலந்தாய்வு மூலமாக, கவுன்சிலிங் மூலமாக அவர்கள் விரும்புகின்ற இடத்தைத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக, மருத்துவ அலுவலர்கள். M.O. என்று சொல்லக்கூடிய Medical Officers, M.B.B.S., படித்த மருத்துவர்கள். இங்கு பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் குழந்தைகள் நல மருத்துவர் வேண்டும், E.N.T. மருத்துவர் வேண்டும், MD, MS, வேண்டுமென்றெல்லாம் கேட்கிறார்கள். இந்திய வரலாற்றிலேயே மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு, walk-in selection என்று சொல்லக்கூடிய ஒரு நடைமுறையை, சிறப்பு அரசாணையைப் பிறப்பித்திருக்கிறது. MD, MS, மேற்படிப்பு படித்த

2015 ஏப்ரல் 1][டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

மருத்துவர்களுக்குத் தேர்வு கிடையாது. Interview கிடையாது. நேரடியாக மூன்று மாதத்திற்கு ஒருமுறை அவர்கள் walk-in selection மூலமாக online-ல் apply செய்து, online-லே அவர்கள் விரும்புகின்ற இடத்தைத் தேர்வு செய்ய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அரசாணை வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவர்களும் நியமிக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். முதன்முதலாக இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க G.O. மூலமாக 433 speciality மருத்துவர்கள், கலந்தாய்வு மூலமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியையும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு 7,243 செவிலியர்களின் வழக்குகளெல்லாம் முடிக்கப்பட்டு, அவர்களுக்கும் notification செய்வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற செய்தியையும் இந்த அவையிலே நான் பதிய வைக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, மருத்துவத் துறையிலே ஒரு மிகப் பெரிய வளர்ச்சியை Tamil Nadu Vision-2023 என்ற இலக்கை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எட்டியிருப்பதற்குக் காரணம், (மேசையைத் தட்டும் ஒலி) human resource என்று சொல்லக்கூடிய, மனித வளம் என்று சொல்லக்கூடிய இந்தப் பணியாளர்கள் நியமனமும்தான் அதற்கு அடித்தளம் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச்சொல்லி, மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்களின் நியமனத்தால் ஓர் அற்புதமான சூழலை, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அனைத்துச் சாதனைகளும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களையே சாரும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .